06

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (நாடகமும் அரங்கியலும் மற்றும் இயற்கை விஞ்ஞானம்)-

2023/2024

இறுதிப்பரீட்சை மட்டம் - 06

**STU6311– கலைத்திட்டக் கோட்பாடுகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

திகதி:- 21.12.2024

---

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும் அத்துடன் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி I

1. கலைத்திட்டம் தொடர்பான **இரண்டு (02)** ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களைக் குறிப்பிடுக.
2. ஆசிரியர்களுக்கு ஏன் கலைத்திட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதற்கான **ஐந்து (05)** காரணிகளை எழுதுக.
3. கலைத்திட்ட அபிவிருத்தி செயன்முறையில் கட்டாயம் உள்ளடக்கப்பட வேண்டிய **நான்கு (04)** அடிப்படை கூறுகளைப் பெயரிடுக.
4. முறைசாரா கலைத்திட்டம் என்றால் கருதப்படுவது யாது என்பதனை **இரண்டு (02)** உதாரணங்களைக் குறிப்பிடுவதன் மூலம் விளக்குக.
5. கலைத்திட்ட முகாமைத்துவத்தின் விடயங்கள் **மூன்றினைக் (03)** குறிப்பிடுக.
6. கலைத்திட்ட மதிப்பீடு என்பதனால் கருதப்படுவது யாது என்பதனை விளக்குக.
7. பாடசாலைக் கலைத்திட்டத்தினை முகாமைத்துவம் செய்வதில் பாடசாலை அதிபரின் வகிபாகத்தின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாகக் கலந்துரையாடுக.
8. இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் என்பதனால் கருதப்படுவது யாது என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

**(08 x 05 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **i.** டய்லரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியினை விளங்கப்படுத்துக. **(06 புள்ளிகள்)**

   **ii.** டயலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியின் **இரண்டு (02)** வலிமைகளையும், **இரண்டு (02)** பலவீனங்களையும் குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

   **iii.** வீலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியை விளக்கி, டய்லரின் மாதிரியினுள் பலவீனங்களை எவ்வகையில் வீலரின் கலைத்திட்ட மாதிரி நிவர்த்தி செய்கின்றது என்பதனை விளக்குக. **(08 புள்ளிகள்)**

10. **i.** கலைத்திட்ட அபிவிருத்தி அணுகுமுறைகளைச் சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

**ii.** தெரிவு செய்யப்பட்ட **இரண்டு (02)** கலைத்திட்ட அணுகுமுறையின் பிரதான அம்சங்களைக் கலந்துரையாடுக. **(06 புள்ளிகள்)**

**iii.** இயற்கை விஞ்ஞானம் மற்றும் நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுடன் தொடர்புபட்ட வகையில் இலங்கையின் பாடசாலை கலைத்திட்டம் எவ்வாறு விருத்தி செய்யப்பட்டுள்ளது என்பதனை விளக்குக. **(08 புள்ளிகள்)**

**11. i.** இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் **ஆறினை (06)** உதாரணங்களுடன் தருக. **(06 புள்ளிகள்)**

**ii.** பிள்ளையின் முழுமையான விருத்திக்கு உதவுவதில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**iii.** இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களின் பங்குபற்றலை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள முடியுமான **மூன்று (03)** உபாயங்களை விளக்குக. **(08 புள்ளிகள்)**

**12. i.** கலைத்திட்டம் ஒன்றின் இலக்குகளையும் நோக்கங்களையும் தீர்மானிக்கும் செயன்முறையை விளக்குக. **(06 புள்ளிகள்)**

**ii.** 1981 கல்வி வெள்ளை அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட **மூன்று (03)** கலைத்திட்ட மறு சீரமைப்புக்களைக் குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**iii.** உதாரணங்களைக் குறிப்பிடுவதன் மூலம் கலைத்திட்டம் ஒன்றின் நோக்கங்களை தீர்மானிப்பதன் மூலாதாரங்களை விளக்குக. **(08 புள்ளிகள்)**

**13. i.** கலைத்திட்ட மதிப்பீட்டாளர் ஒருவர் கொண்டிருக்கக் கூடிய **ஆறு (06)** தகமைகளைச் சுருக்கமாக மதிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**ii.** இயற்கை விஞ்ஞானம் மற்றும் நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களில் ஆசிரியர்களினால் பயன்படுத்த முடியுமான **மூன்று (03)** கணிப்பீட்டு முறைகளைச் சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

**iii.** உங்களது பாடசாலைச் சூழலுடன் தொடர்புபட்ட வகையில் கலைத்திட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொருத்தமான ஒரு உதாரணத்தினை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்ட மதிப்பீட்டு மாதிரியின் படிகளைக் கலந்துரையாடுக. **(08 புள்ளிகள்)**

**14. i.** 1998 கல்வி சீர்திருத்தத்தின் **இரண்டு (02)** நோக்கங்களைக் குறிப்பிட்டு உதாரணங்களுடன் கலந்துரையாடுக. **(10 புள்ளிகள்)**

**ii.** பாடசாலை கலைத்திட்டமொன்றினை விருத்தி செய்யும் போது உளவியல் அடிப்படைகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு பொருத்தமான உதாரணங்களுடன் கலந்துரையாடுக. **(10 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*